உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 9 | உருத்ரோத்காரிஸு ஆவணி, புரட்டாசிமீ 1923ஸு ஆகஸ்டு, செப்டம்பர்மீ | இதழ் 5,6 |
|---|---|---|


உள்ளுறை


| | பக்கம். |
|---|---|
| வேட முதலிய இராசி விளக்கம் ... ... ... | 81 |
| மஹாளய பக்ஷம் ... ... ... ... | 86 |
| சைவ பாடசாலை அத்திவாரப் பிரதிட்டை ... ... | 90 |
| சன்மார்க்கம் ... ... ... ... ... | 93 |
| கடவுளின் உருவம் ... ... ... ... | 100 |
| பெரிய புராணச் சுருக்கம் முதற்பகுதி ... ... ... | 104 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர் :

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

**1923.**

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

## சந்தாதாரர்களுக்கு விஞ்ஞாபனம்

இக்காலத்தில் சைவ சமயபரிபாலனம் செய்வாரில்லை. சைவ ஒழுக்கங்கள் குன்றிப்போயின. ஒவ்வோர் காலத்தில் ஒவ்வொரு சைவாபிமானிகள் வெளிப்பட்டுச்செய்யும் முயற்சிகளும் அவ்வவர்களோடு அழிகின்றன. இப்படியே அடியேன் செய்யும் முயற்சிகளும் என்னோடேயழிந்து போகலாம். ஆதலால் நான் இப்போது தொடங்கி நடத்திவருவன என்றும் நிலைபெற்று மேலுமேலும் விருத்தியடையு மாறு பெருமுயற்சிகள் செய்துகொண்டிருக்கிறேன். நான் இன்னும் இரண்டொரு வருடம் உயிரோடிருந்தால் இம்முயற்சி இறைவனருளால் முற்றுப்பெறும். இதற்கிடையில் பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதுவதில் என்மனம் செல்லவில்லை. அவரவர்கள் பலபல உத்திகளை நாடி எழுதுங் கடிதங்களைக் கவனிக்கவும் இயலவில்லை. பத்திரிகை தாமதித்து அனுப்பநேரிடுகிறது. இக்குறைகளை சிலகாலம்வரை அன்பர்கள் பொறுத்துக்கொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன்.

இ. ஆதிமூல முதலியார்.

---

## சருவஞானோத்தர ஆகமம்

### ஞானபாதம் தமிழ் மூலமும், மூத்திரத்ந விருத்தியும்

இது ஸ்ரீகண்ட பரமேசுவரரால் ஸ்ரீ சுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0 தபால் சார்ஜ் வேறு

ஒரு முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்:

போ. முத்தைய பிள்ளை,

சிவாகமசங்கம், தேவகோட்டை.

---

புதிய புதிப்பு! திருமூலர் புதிய பதிப்பு!!

# திருமந்திரம்

பல பிரதிகளுக்கிணங்கப் பரிசோதித்தும், சில அரும் பாடல்களை (*) இக்குறியிட்டு விளக்கியும், இறுதியில் செய்யுள் முதற்குறிப் பகராதி சேர்த்தும் நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டுளது. விலை ரூபா 2 4 0

"நவசக்தி" புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்


| மலர் 9 | உருத்ரோத்காரி௵ ஆவணி, புரட்டாசி௴<br>1923௵ ஆகஸ்டு, செப்டம்பர்௴ | இதழ் 5, 6 |
|---|---|---|


### திருநேரிசை

கரும்பினு மினியான் றன்னைக் காய்கதிர்ச் சோதி யானை
இருங்கட லமுதந் தன்னை யிறப்பொடு பிறப்பி லானைப்
பெரும் பொருட் கிளவியானைப் பெருந்தவ முனிவ ரேத்தும்
அரும்பொனை நினைந்த நெஞ்ச மழகிதா நினைந்த வாறே.

—

## மேட முதலிய இராசி விளக்கம்

இப்பூமியோடு தொடர்புடைய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் நிற்கும் ஆகாயப்பரப்பானது பன்னிரண்டு இராசிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விராசிகள் மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்பன. மேடம் = ஆடு. இடபம் = மாடு. மிதுனம் = வீணை. கர்க்கடகம் = நண்டு. சிங்கம் = மிருகராசன். கன்னி = பெண். துலாம் = தராசு. விருச்சிகம் = தேள். தனுசு = வில். மகரம் = மகரமீன். கும்பம் = குடம். மீனம் = மீன். இப்படி பன்னிரண்டு இராசிகளுக்கும் ஆடு முதலிய பொருள்களின் பெயர்கள் இருக்கின்றன. ஆடு மாடு முதலிய பெயர்களால் அவை வழங்கப்படுதல் யாது காரணத்தால் என்பதனை அநேகர் அறிய விரும்புவார்கள். அவை ஒவ்வொரு காரணங் கொண்டே அவ்வாறு வழங்கப்பட்டன வென்பதும் அக்காரணங்களாவன இவை யென்பதும் எல்லார்க்கும் சர்வ சாதாரணமாய்த் தெரிய மாட்டாது.

நக்ஷத்திரங்கள் நிற்கும் நிலைகொண்டே இராசிகள் அப்பெயர் பெறுகின்றன. ஒவ்வொரு நக்ஷத்திரமும் நந்நான்கு பாதங்களுடை

யனவாம். அவற்றுள் நக்ஷத்திரங்களின் ஒன்பது பாதங்கொண்டது ஒவ்வொரு இராசியாகும். இராசி = வரிசை. நக்ஷத்திரங்கள் நிற்கும் வரிசைக்கிரமமே இராசியாகும்.

அச்சுவினியில் பரணியும், கார்த்திகை முதற்காலுங் கொண்டது மேட ராசி. அதாவது அச்சுவினியின் நான்கு பாதமும், பரணியின் நான்கு பாதமும், கார்த்திகையின் முதற் பாதமும் ஆகிய ஒன்பது பாதங்கொண்டது மேட ராசி. இதற்கு மேட ராசி என்றுபெயர் வந்ததற்குக் காரணம் என்ன வெனில், அந்த நக்ஷத்திரங்கள் நிற்கும் வரிசையின் வடிவம் பார்வைக்கு ஆடுபோலிருப்பதால் அது மேடம் என்னப்பட்டது.

இப்படியே கார்த்திகையின் பின் மூன்று பாதமும், உரோகணியின் நான்கு பாதமும், மிருகசீரிட முன்னிரண்டு பாதமும் ஆகிய ஒன்பது பாதம் சேர்ந்தது இடபராசி. இந்த நக்ஷத்திரங்கள் நிற்கும் வரிசை இடபம் போன்ற வடிவுள்ளதாயிருப்பதால் அது இடபராசியென்னப்பட்டது.

மிருக சீரிடத்தின் பின்னிரண்டு பாதமும், திருவாதிரையின் நான்கு பாதமும், புனர்பூசமுன்மூன்று பாதமும் ஆகிய ஒன்பது பாதமுள்ளது மிதுன ராசி. இவை நிற்கும் வரிசையின் வடிவம் வீணைபோலிருத்தலால் இது மிதுன ராசி யென்னப்பட்டது.

புனர்பூசத்து நாலாம் பாதமும், பூசத்து நான்கு பாதமும், ஆயிலியத்து நான்கு பாதமுமாகிய ஒன்பது பாதமுங் கொண்டது கர்க்கடகமாம். இவை நிற்கும் வரிசையின் வடிவம் நண்டுபோலிருத்தலால் கர்க்கடகமென்னப்பட்டது.

மகத்தின் நான்கு பாதமும் பூரத்தின் நான்கு பாதமும் உத்தரத்து முதற் பாதமும் ஆகிய ஒன்பது பாதங் கொண்டது சிங்க ராசி. இதின் வடிவம் சிங்கம் போன்றிருத்தலால் சிங்க ராசி யென்னப்பட்டது.

உத்தரத்துப் பின் மூன்று பாதமும், அத்தத்தின் நான்கு பாதமும், சித்திரையின் முன்னிரண்டு பாதமும் ஆகிய ஒன்பது பாதமும் சேர்ந்தது கன்னி ராசியாகும். இவை நிற்கும் வரிசை ஒரு பெண் நிற்பது போலிருப்பதனுல் இது கன்னி ராசி யென்னப்பட்டது.

சித்திரையிற் பின்னிரண்டு பாதமும், சுவாதியின் நான்காம் பாதமும், விசாகத்து முன் மூன்று பாதமும் ஆகிய ஒன்பதும் சேர்ந்தது துலா ராசியாகும். இவை நின்ற வரிசை தராசுபோலிருத்தலால் இது துலா ராசி யென்னப்பட்டது.

விசாகத்து நான்காம் பாதமும் அநுஷத்து நான்கு பாதமும் கேட்டையின் நான்கு பாதமும் ஆகிய ஒன்பது பாதமும் சேர்ந்தது விருச்சிக ராசியாகும். இவை நின்ற வரிசை தேளின் வடிவத்தைப்போலிருத்தலால் விருச்சிக மென்னப்பட்டது.

மூலத்து நான்கு பாதமும், பூராடத்து நான்கு பாதமும், உத்தராடத்து முதற் பாதமும் ஆகிய ஒன்பது பாதமுஞ் சேர்ந்தது தனுசாகும். இவை நின்ற வரிசை வில்வடிவாயிருத்தலால் தனுசு எனப்பட்டது.

உத்தராடத்துப் பின் மூன்று பாதமும், திருவோணத்து நான்கு பாதமும், அவிட்டத்து முன்னிரண்டு பாதமும் ஆகிய ஒன்பதும் சேர்ந்தது மகர ராசியாகும். இவை நின்ற வரிசை மகரமீன் வடிவம் போன்றிருத்தலால் இது மகரம் என்னப்பட்டது.

அவிட்டத்துப் பின்னிரண்டு பாதமும், சதயத்து நான்கு பாதமும், பூரட்டாதியின் முன் மூன்று பாதமும் ஆகிய ஒன்பதும் சேர்ந்தது கும்பராசியாகும். இவை நின்ற வரிசை குடம் போலிருத்தலால் கும்பராசி யென்னப்பட்டது.

பூரட்டாதியின் நான்காம் பாதமும், உத்தரட்டாதியின் நான்கு பாதமும் இரேவதியின் நான்கு பாதமும் ஆகிய ஒன்பதும் சேர்ந்தது மீனராசியாகும். இவை நின்ற வரிசை மீன் போலிருத்தலால் மீனராசி யென்னப்பட்டது. மீனம் இரண்டு தலையுள்ள இரட்டை மீன் போல்வது.

இவ்வாறு இருபத்தேழு நக்ஷத்திரங்களும் ஆகாயப் பரப்பிலே நிற்கும் வரிசைக் கிரமங்களை நோக்கிப் பன்னிரண்டாக வகுக்கப்பட்ட பாகங்களுள், இது இன்னபாகம் என உணரும் பொருட்டு ஞாபகக்குறியாக இப்பெயர்களிடப்பட்டன. இன்ன நக்ஷத்திரத்தில் இன்ன பாகத்தில் இவன் பிறந்தானென ஒருவனுடைய சனன காலத்தைச் சொன்ன உடனே அவன் பிறந்த ராசி இன்ன ராசியென்று அறிதற்கு இக்கணக்கு மிக உதவி செய்கிறது.

நக்ஷத்திரங்களும் கிரகங்களும் இப்பூமியும் ஒன்றோடொன்று தொடர்பு பட்டிருத்தலாலும் நக்ஷத்திரங்கள் கிரகங்களின் கவர்ச்சி பூமியோடு சம்பந்தப்படுதலாலும், அக்கவர்ச்சியினாலே அவற்றின் குணங்கள் பூமிக்கு வந்து, பூமி அவ்வவற்றின் குணங்களுக்கேற்ப அவ்வப்பொழுது மாறுபாடு அடைதலினாலும், இராசி வட்டங்களில் வெவ்வேறு பலனிருக்கின்ற தென்பது உண்மையா

கிரகங்கள் தனித்தனியே ஒவ்வொரு குணமுடையன. அவ்வாறே நக்ஷத்திரங்களும் தனித்தனி ஒவ்வொரு குணமுடையன. ஆயினும் கிரகங்கள் ஊர்ந்து சஞ்சரித்து வரும் நேரத்தில், இராசி வட்டங்களிலுள்ள ஒவ்வொரு நட்சத்திரங்களோடும் கூடுதலால், அவ்வாறு கூடிய அந்த நேரத்தில் அவ்விரண்டின் தொடர்பிலிருந்து வேறுபட்ட மற்றொரு குணம் உண்டாக ஏதுவாகின்றது. பூமியானது தானும் இந்த ராசி வட்டத்தில் ஊர்ந்து சஞ்சரித்து இந்த நட்சத்திரங்கள் கிரகங்களின் தனித்தனி குணங்களையும், கிரகங்களும் நட்சத்திரங்களும் சேர்வதனால் மாறுபட்டு வரும் குணங்களையும் மாறி மாறி அடைந்துவருதலால், அவ்வக்காலங்களுக் கேற்ப குணபேதங்கள் பூமிக்கு உண்டென்றும், பூமியிலுள்ள நாம் அவற்றின் பலனைக் காலந்தோறும் வித்தியாசம் வித்தியாசமாக அநுபவிக்கின்றோ மென்றும் நன்றாக அறிந்து கொள்ளலாம்.

பூமி சூரியனோடு சம்பந்தமுற்று அதன் கிரணத்தை அடையும் போது பூமியில் வெப்பமும், சந்திரனோடு சம்பந்தமுற்று அதன் கிரணத்தை யடையும்போது பூமியிற் குளிர்ச்சியும் உண்டாதல் அநுபவ சித்தம். பூமியிலுண்டான வெப்பம் குளிர்களை நாமும் அநுபவிக்கின்றோம். சூரிய சந்திரரால் உண்டாகும் குண வேறுபாடு போலவே ஏனைக் கிரகங்களாலும் நட்சத்திரங்களாலும் பூமியில் மாறுபாடுகள் உண்டாகின்றன. சூரிய சந்திரரால் உண்டாகும் குண வேறுபாடு தூலமாயறியக் கிடக்கின்றது. மற்றைக் கிரகங்கள் நட்சத்திரங்களால் உண்டாகும் குண வேறுபாடுகள் அங்ஙனம் தூலமாதலின்றிச் சூக்குமமாயிருக்கின்றன. சூக்குமமாயிருத்தலினாலே அவற்றை யில்லை யென்று சொல்லிவிடக் கூடாது.

கிரகங்கள் நிலையின்றிச் சஞ்சரித்தலால், எங்கெங்கு ராசியில் எங்கெங்கு நட்சத்திரத்தோடு கூடுகின்றனவோ, அந்த நேரத்தில் அந்த நட்சத்திர குணத்தால் தம் குணம் வேறுபட்டு பூமிக்கும் அவ்வேறுபட்ட குணங்களை மாறி மாறிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அதுபற்றியே எந்த ராசியில் எந்த கிரகம் நிற்கின்றது என்று அறிந்து அவற்றின் நிலைக்கேற்ற பலனுண்டென்று சொல்லுகிறார்கள். சில கிரகங்கள் ஒன்று கூடுதலினாலும் அவற்றின் குணம் வேறுபட்டுப் பலனும் வித்தியாசமடைகிறது. இப்படி இந்த இராசிப் பிரமாணம் அவற்றின் குண வேறு பாடான பலனையடைதற்கும் பெருங் கருவியாயிருக்கிறது.

பூமி தன்னைத்தான் சுற்றுதலினால், இந்தப் பன்னிரண்டு ராசிகளிலுமுள்ள கிரகங்கள் நட்சத்திரங்களின் பலனைத் தினம் அனுபவிக்கின்றது. சூரியனை ஒரு வருடத்திற் சுற்றுதலினாலே, தன் சுற்றிலுள்ள பன்னிரண்டு ராசிகளிலும் பன்னிரண்டு விதமான குணங்களையனுபவிக்கின்றது.

சூரியன் அச்சுவினி முதலிய ஒன்பது பாத நட்சத்திரங்களோடு கூடி நிற்குங்காலம் மேடரவி யெனப்படுகின்றது. இரவி = சூரியன். மேடரவி யென்றால் மேடராசியில் சூரியன் நிற்கின்றது என்பது பொருளாம். அதனால் அக்காலம் மேடமாசம் எனப்படுகின்றது. மாசம் என்பது அளவை என்று பொருள்படுதலால் மேடமாசம் என்பது மேடராசியில் சூரியன் நின்ற காலம் என்பதாகும். சூரியன் எந்த நேரத்தில் எந்த ராசியில் பிரவேசிக்கின்றதோ அந்த நேரம் அந்த மாசப் பிறப்பாகும். எந்த நேரத்தில் எந்த ராசியை விடுகிறதோ அந்த காலம் அந்த மாச முடிவாகும். இந்த வேற்றுமை கொண்டே இது மேடமாசம், இது இடபமாசம், இது மிதுன மாசம் என்று சொல்லப்படுகின்றது. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பருவ வேறுபாடுகளும் இந்த ராசி சஞ்சார வேறுபாட்டினாலேயே யுண்டாகின்றன. அயனக் கணக்கும் வருடக் கணக்கும் இந்த ராசிப் பிரமாணத்திலிருந்தே யுண்டாகின்றன.

சூரியனால் அளக்கப்படும் கால அளவைபோல், சந்திரன் அந்தந்த ராசியை யடைதலினாலும் கால அளவை அளக்கப்படுகின்றது. சூரியனால் அளக்கப்படும் கால அளவை சூரியமானம் எனவும், சந்திரனால் அளக்கப்படும் கால அளவை சந்திரமானம் எனவும் பெயர் பெறும். மானம் = அளவை. நட்சத்திரங்களின் சேர்க்கை வேறுபாடே இராசியென்று தெரிதலால், அந்தந்த நட்சத்திரங்களின் குண வேறுபாடுகள் இராசியிலும் வைத்தெண்ணப்படும். அதனால் இன்ன இன்ன இராசி இன்ன இன்ன கருமங்களுக்கு ஆகும் ஆகா என்னும் வேறுபாடுகள் கவனிக்கப்படுகின்றன. சோதிட நூல் கால வேறு பாடுகளைப் பிரித்து, நல்ல இலக்கினத்தில் எந்தக் கருமமுஞ் செய்யப்படல் வேண்டும் என்று வகுத்தும், இன்ன கிரகம் இன்ன ராசியில் வந்தால் நோய் முதலாய் இன்ன பலன் உண்டாமென்று சொல்வதும் அவற்றின் குண வேறுபாடு கொண்டேயாம்.

இவை அவ்வப்பொழுது நிகழும் சம்பவங்களாதலால், உண்மையோ பொய்யோ என்று சந்தேகிக்க இடமில்லை. யாவும் பிரத்தியட்சப் பிரமாணமாயுள்ளன.

இவ்வாறு மேட முதலிய இராசிப் பிரமாணங்கள் அமைந்திருக்கும் நுட்பவிளக்கம் அறிவுடையார்க்கு அதிசயத்தையும் மகிழ்ச்சியையும் விளைவிக்கு மென்றுணர்க—(ஞானசித்தி.)

சோதிடம் என்பது வேதத்திற்கு முக்கியமான அங்கங்களுள் ஒன்றாயிருந்தும் சோதிடர்கள் ஒன்றுகூடிச் சபைகளைக் கூட்டி இந்த அருமையான வித்தையை வளர்க்காமலிருப்பதனால் அனேகருக்குச் சோதிடத்தில் நம்பிக்கை யில்லாமலிருக்கிறது. இவர்கள் இனியாவது இதின் அபிவிருத்தியின் பொருட்டு வேண்டிய முயற்சிகளை விரைந்து செய்தல்வேண்டும்—ப - ர்.

---

## மஹாளய பக்ஷம்

" சோதிட கலாநிதி " என்னும் பத்திரிகையி லிருந்து அனுவதிக்கப்பட்டது.

மலர் தலையுலகத்துள்ள சகல ஜீவகோடிகளின் ஆத்துமகாரகனாகிய சூரியபகவான் கன்னிராசியை அடைந்திருக்கும் காலமான புரட்டாதி மாசத்தில் வரும் அமாவாசைக்கு முந்திய பதினைந்து தினங்களும் மஹாளய பக்ஷ மென்று சொல்லப்படும். மஹாளய பக்ஷ மென்பது பிதுர் தேவதைகளின் ஆராதனைக்குரிய சிறந்தகாலமென்பது பொருளாகும். இக்காலத்தில் எவ்வித சுபகருமங்களுஞ் செய்யக்கூடாது. ருதிரோற்காரிஹூ புரட்டாதிமீ ௧0உ மங்கள வாரம் (25-9-23) முதல் உசஉ மங்களவாரம் வரையிலும் மஹாளய பக்ஷமாகும். மற்றைய மாதங்களைவிட இம்மஹாளய பக்ஷத்திற்கு இந்தப் புரட்டாதி மாசத்தை மட்டும் முக்கியமானதாகக் கொள்ளப்பட்டிருப்பது யாதுபற்றி எனின், பிதுர் தேவதைகளின் ஆசியை இல்லறத்தான் விரும்பி நிற்றலினாலும், அப்பிதிர் தேவதைகளுடைய நல்லாசியே இல்லறவாழ்க்கைக்குப் பிராணதாரம்போன்றதாதலினாலும், அவர்களுடைய கருமங்களை வெகு சிரத்தையுடன் செய்யவேண்டியிருப்பதினாலும், அவ்வகைச் சிரத்தைக்குப் பிரதானமானது புத்தியாதலினாலும், புத்திக்கு அதிதேவதை புதனனபடியாலும், புதனுக்கு உச்சமூலத் திரிகோணமாகச் சிறந்த வீடு கன்னியாதலினாலும், பிதுர்காரகனும் ஆத்மகாரகனும் சூரியனாதலினாலும், சூரியன் கன்னிராசியை அடைந்திருக்கும் காலமான புரட்டாதி மாதமே இக்கருமத்திற்கு முக்கியமென்று கொள்ளப்பட்டிருக்கின்றதாகும். பிதுர் தேவதைகளின் கருமங்கள் வெகு சிரத்தையுடன் செய்யவேண்டு மாதலால் அக்கருமத்திற்குச் சிராத்தம் என்று பெயருண்டாயிற்று. சிராத்தமென்பது சிரத்

தையின் காரணமாக (இறந்துபோன தாயார் தந்தையர் நிரய (நரகத்) துன்பமுறாது நற்கதி அடையும்பொருட்டும், அவர்களது ஆசி கிடைத்தற்பொருட்டும்) குறித்தகாலங்களிற் செய்யப்படுங் கருமமாகும்.

அங்கிரச பிரஜாபதிக்கு சுவதை என்பவளிடத்தில் பிறந்தவர்கள் பிதுர் தேவதைகள் எனப்படுவர். இவர்களே உலகத்துப் பிரஜாவிருத்திக்கு வித்தாயிருப்பவர்கள். இவர்களே மனுஷ கணங்களுக்கு ஆதி பிதாக்களாவர். வசு, உருத்திரர், ஆதித்தியர் என்னுமிவர்களுடைய ரூபங்களை யுடையவர்களாய் சந்திரலோகத்திலிருப்பவர்களாகும். மனிதவர்க்கங்களின் ஆதிபிதாக்களாகிய இவர்கள் ஒருகால் முனிவர்பெருமானும் சமதக்கினி முனிவரைக் கீரிப்பிள்ளையாகுக எனச் சபித்தனரெனின் இவர்கள் சாபத்திற்கு நம்மனோர் எப்போதும் அஞ்சியிருத்தல் வேண்டியது அவசியமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இன்னும் இறந்துபோகின்றவர்க ளெல்லோரும் அவரவர்கள் குடும்பத்தினர்க்குப் பிதிரராகின்றார்கள். ஒருகாலத்தில் இந்திராதி தேவர்களும், பிதிரர்களும், அசுரர்களுடைய இம்சைக்காற்றாது காகரூபந்தாங்கிப் பூமியிற் சஞ்சரித்தார்கள். அதுபற்றியே காகங்களுக்குப் பிண்டமிட்டுண்ணும் வழக்கம் உலகத்திலுண்டானது. இதுவே வாயசபிண்டமெனப்படும். விளாங்கனிப் பிரமாணமாகப் பிதிர் தேவதைகளுக்கு இடப்படும் பலியே பிண்டமெனப்படும். அறிவுடைய ஆஸ்திக இல்லத்தினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினமும் இந்தப் பிண்டபலி இட்டுண்ணுதலே சாலச் சிறந்ததாகும்.

பிதுர்தேவதைகள் வசு-ருத்திர-ஆதித்திய சொரூபமா யிருக்கிறார்கள் என்று முன்பு கூறியிருக்கின்றோம். ஆதலால் அதன் பொருளை இங்கு சுருக்கிக் கூறுவாம். வஸு என்னுஞ் சொல்லானது வஸ் என்னும் தாதுவிலிருந்து உண்டானது. அதற்குக் கூடவசித்தல் அல்லது இருத்தல் என்பது பொருள். பிதிர்தேவதைகள் தமது தூலதேகம் ஒழிந்தவர்களாயினும் சூட்சுமதேகத்துடன் நம்முடைய பக்கத்திலிருந்து நம்முடைய க்ஷேமத்தைக் கவனித்துக்கொண்டு நம்மைக் காப்பாற்றிவருகின்றனர் என்றும், இங்ஙனமே ருத்திரர் என்ற பதத்திற்கும் பொருளாகின்றது. அதாவது ருஜ : x த்ராவயதி என்னுந் தாதுக்களின் சேர்க்கையினால் நம்முடைய துன்பங்களை யெல்லாம் அகற்றிக்கொண்டு நமக்கு அனுக்கிரகஞ் செய்கிறவர்களென்றும், இங்ஙனமே ஆதித்தியர் என்னும் பதத்திற்குச் சுயப்பிரகாசத்தினால் எப்போதும் விளங்கி நமக்கு நல்ல அறிவையும், ஞானத்தையுங் கொடுத்

இவ்வாறு மேட முதலிய இராசிப் பிரமாணங்கள் அமைந்திருக்கும் நுட்பவிளக்கம் அறிவுடையார்க்கு அதிசயத்தையும் மகிழ்ச்சியையும் விளைவிக்குமென்றுணர்க—(ஞானசித்தி.)

சோதிடம் என்பது வேதத்திற்கு முக்கியமான அங்கங்களுள் ஒன்ருயிருந்தும் சோதிடர்கள் ஒன்றுகூடிச் சபைகளைக் கூட்டி இந்த அருமையான வித்தையை வளர்க்காமலிருப்பதனால் அநேகருக்குச் சோதிடத்தில் நம்பிக்கையில்லாமலிருக்கிறது. இவர்கள் இனியாவது இதின் அபிவிருத்தியின் பொருட்டு வேண்டிய முயற்சிகளை விரைந்து செய்தல்வேண்டும்—ப - ர்.

---

## மஹாளய பக்ஷம்

"சோதிட கலாநிதி" என்னும் பத்திரிகையி லிருந்து அனுவதிக்கப்பட்டது.

மலர் தலையுலகத்துள்ள சகல ஜீவகோடிகளின் ஆத்துமகாரகனுகிய சூரியபகவான் கன்னிராசியை அடைந்திருக்கும் காலமான புரட்டாதி மாசத்தில் வரும் அமாவாசைக்கு முந்திய பதினைந்து தினங்களும் மஹாளய பக்ஷ மென்று சொல்லப்படும். மஹாளய பக்ஷ மென்பது பிதுர் தேவதைகளின் ஆராதனைக்குரிய சிறந்தகாலமென்பது பொருளாகும். இக்காலத்தில் எவ்வித சுபகருமங்களுஞ் செய்யக்கூடாது. ருதிரோற்காரிஹு புரட்டாதிமீ ௧௦௨ மங்கள வாரம் (25-9-23) முதல் உ௪௨ மங்களவாரம் வரையிலும் மஹாளய பக்ஷமாகும். மற்றைய மாதங்களைவிட இம்மஹாளய பக்ஷத்திற்கு இந்தப் புரட்டாதி மாசத்தை மட்டும் முக்கியமானதாகக் கொள்ளப்பட்டிருப்பது யாதுபற்றி எனின், பிதுர் தேவதைகளின் ஆசியை இல்லறத்தான் விரும்பி நிற்றலினுலும், அப்பிதிர் தேவதைகளுடைய நல்லாசியே இல்லறவாழ்க்கைக்குப் பிராணுதாரம்போன்றதாதலினுலும், அவர்களுடைய கருமங்களை வெகு சிரத்தையுடன் செய்யவேண்டியிருப்பதினுலும், அவ்வகைச் சிரத்தைக்குப் பிரதானமானது புத்தியாதலினுலும், புத்திக்கு அதிதேவதை புதனுனபடியாலும், புதனுக்கு உச்சமூலத்திரிகோணமாகச் சிறந்த வீடு கன்னியாதலினுலும், பிதுர்காரகனும் ஆத்மகாரகனும் சூரியனுதலினுலும், சூரியன் கன்னிராசியை அடைந்திருக்குங் காலமான புரட்டாதி மாதமே இக்கருமத்திற்கு முக்கியமென்று கொள்ளப்பட்டிருக்கின்றதாகும். பிதுர் தேவதைகளின் கருமங்கள் வெகு சிரத்தையுடன் செய்யவேண்டுமாதலால் அக்கருமத்திற்குச் சிராத்தம் என்று பெயருண்டாயிற்று. சிராத்தமென்பது சிரத்

தையின் காரணமாக (இறந்துபோன தாயார் தந்தையர் • நிரய (நரகத்) துன்பமுறாது நற்கதி அடையும்பொருட்டும், அவர்களது ஆசி கிடைத்தற்பொருட்டும்) குறித்தகாலங்களிற் செய்யப்படுங் கரும மாகும்.

அங்கிரச பிரஜாபதிக்கு சுவதை என்பவளிடத்தில் பிறந்தவர்கள் பிதுர் தேவதைகள் எனப்படுவர். இவர்களே உலகத்துப் பிரஜாவிருத்திக்கு வித்தாயிருப்பவர்கள். இவர்களே மனுஷ கணங்களுக்கு ஆதி பிதாக்களாவர். வசு, உருத்திரர், ஆதித்தியர் என்னுமிவர்களுடைய ரூபங்களை யுடையவர்களாய் சந்திரலோகத்திலிருப்பவர்களாகும். மனிதவர்க்கங்களின் ஆதிபிதாக்களாகிய இவர்கள் ஒருகால் முனிவர்பெருமானும் சமதக்கினி முனிவரைக் கீரிப்பிள்ளையாகுக எனச் சபித்தனரெனின் இவர்கள் சாபத்திற்கு நம்மனோர் எப்போதும் அஞ்சியிருத்தல் வேண்டியது அவசியமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இன்னும் இறந்துபோகின்றவர்க ளெல்லோரும் அவரவர்கள் குடும்பத்தினர்க்குப் பிதிரராகின்றார்கள். ஒருகாலத்தில் இந்திராதி தேவர்களும், பிதிரர்களும், அசுரர்களுடைய இம்சைக்காற்றாது காகரூபந்தாங்கிப் பூமியிற் சஞ்சரித்தார்கள். அதுபற்றியே காகங்களுக்குப் பிண்டமிட்டுண்ணும் வழக்கம் உலகத்திலுண்டானது. இதுவே வாயசபிண்டமெனப்படும். விளாங்கனிப் பிரமாணமாகப் பிதிர் தேவதைகளுக்கு இடப்படும் பலியே பிண்டமெனப்படும். அறிவுடைய ஆஸ்திக இல்லத்தினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினமும் இந்தப் பிண்டபலி இட்டுண்ணுதலே சாலச் சிறந்ததாகும்.

பிதுர்தேவதைகள் வசு-ருத்திர-ஆதித்திய சொரூபமா யிருக்கிறார்கள் என்று முன்பு கூறியிருக்கின்றோம். ஆதலால் அதன் பொருளை இங்கு சுருக்கிக் கூறுவாம். வஸு என்னுஞ் சொல்லானது வஸ் என்னும் தாதுவிலிருந்து உண்டானது. அதற்குக் கூடவசித்தல் அல்லது இருத்தல் என்பது பொருள். பிதிர்தேவதைகள் தமது தூல தேகம் ஒழிந்தவர்களாயினும் சூட்சுமதேகத்துடன் நம்முடைய பக்கத்திலிருந்து நம்முடைய க்ஷேமத்தைக் கவனித்துக்கொண்டு நம்மைக் காப்பாற்றிவருகின்றனர் என்றும், இங்ஙனமே ருத்திரர் என்ற பதத்திற்கும் பொருளாகின்றது. அதாவது ருஜ: x த்ராவயதி என்னுந் தாதுக்களின் சேர்க்கையினால் நம்முடைய துன்பங்களை யெல்லாம் அகற்றிக்கொண்டு நமக்கு அனுக்கிரகஞ் செய்கிறவர்களென்றும், இங்ஙனமே ஆதித்தியர் என்னும் பதத்திற்குச் சுயப்பிரகாசத்தினால் எப்போதும் விளங்கி நமக்கு நல்ல அறிவையும், ஞானத்தையுங் கொடுத்

துக் காப்பாற்றுகின்றவர்கள் என்று ஏற்படுகின்றது. பிதுர்தேவதைகளின் திருப்தியின் பொருட்டு பிதுர் கிருத்தியங்களில் நாம் ஆராதிக்கும் பிதுர், பிதாமகன், பிரபிதாமகன் என்னும் மூன்று பிதுர்வர்க்கங்களில் நமக்குச் சமீபமுறை யுள்ளவர்கள் வசுவினிடத்திலும், அதற்கடுத்தவர்கள் உருத்திரர் இடத்திலும், அதற்கடுத்தவர் ஆதித்தியரிடத்திலும் அந்தர்கதமாயிருந்து அந்தந்தந்த தேவர்களுடைய பிரசாதத்தை நமக்கு வாங்கித் தருகின்றார்கள். ஆதலாற்றான் அந்தந்தத் தேவதைகளின் ரூபமாக அம்மூவர்களையும் நாம் ஆராதிக்கவேண்டியது கடமையென விதிக்கப்பட்டிருக்கின்றது.

பிதுர் தேவதைகள் சந்திரலோகத்தில் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு அமாவாசை கழித்த பிரதமை முதல் பௌர்ணிமை வரையுமுள்ள காலமான சுக்கில பக்ஷம் பகலும், பௌர்ணிமை கழித்த பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள கிருஷ்ண பக்ஷம் இரவுமாகும். ஒரு சாந்திரமான மாதம் அவர்களுக்குப் பகலிரவு கூடிய ஒரு தினமாகின்றது. எந்தத்தினத்தில் நமக்கு எதிரிலிருக்கும் சந்திரகோளத்தின் பாதி முழுவதும் இருளாகி விடுகிறதோ அதே தினத்தில் பிதுரர்களிருக்கும் சந்திரகோளத்தின் பாதிமுழுவதும் பிரகாசமடைகின்றது. அத்தினத்தை நாம் அமாவாசை என்றும் தரிசமென்றும் வழங்குகின்றோம். அமா-கூட, வசு-வசித்தல். எனவே சந்திரன் சூரியனுடன் வசித்திருக்கும் தினமென்பதே அமாவாசை என்பதின் அருத்தமாகும். சூரியனுடன் சந்திரன் ஒரு ராசியில் காணப்படும் தினமென்பதே தரிசமென்பதன் அருத்தமாகும். ஒவ்வொரு பௌர்ணிமை காலமும் நடுராத்திரிப்பொழுதான அர்த்தராத்திரி காலமாகின்றது. ஆகவே கிருஷ்ணபக்ஷ அஷ்டமி அவர்களுக்குச் சூரியோதய காலமும், சுக்கிலபக்ஷ அஷ்டமி சூரியாஸ்தமய காலமும் ஆகின்றது. இங்ஙனமே பாஸ்கராசார்யார் தமது சித்தாந்த சிரோமணியில் கூறியிருக்கின்றார். ஆதலால் பிதுர்லோகவாசிகளின் மத்தியான்ன போஜன சமையமானதும், உச்சி சந்திகாலமுமான அமாவாசை தினம் அவர்களைத் திருப்தி செய்விக்குஞ் சிறந்த விரததினமாயிற்று என்று அறியவேண்டும். பிதுர்கள் தூமாதி மார்க்க அபிமான தேவதைகளானபடியால் இவர்களுடைய ஆராதனைக்கு தக்ஷிணாயனம், கிருஷ்ண பக்ஷம் முக்கியமானதாயிற்று. புரட்டாதி மாதம் கிருஷ்ண பக்ஷகாலமான மஹாளய பக்ஷ தினங்கள் பதினைந்தில் சிராத்தம் செய்வதனால் உண்டாகும் பலனுவன :—

பிரதமை - தனசம்பத்து, துதிகை - பிரஜாலாபம், திருதிகை - வளர்ச்சி, லாபம், சதுர்த்தி-சத்துரு நாசம், பஞ்சமி-தனசம்பத்து, சஷ்டி-கீர்த்தி, சப்தமி-கணாதிபத்யம், அஷ்டமி-சிறந்தகுணம், நவமி-ஸ்திரீசுகம், தசமி-இஷ்டார்த்தசித்தி, ஏகாதசி-வேதசித்தி, துவாதசி-தீர்க்காயுள், திரயோதசி-பிரஜாவிருத்தி, சதுர்த்தசி-யந்திரங்களால் இறந்தவர்களுக்குச் செய்யின் நலம், அமாவாசை-சுபம்.

இப்பதினைந்து தினமும் விடாதுசெய்து வந்தால் ஒரு வருடம் முற்றும் சிராத்தம் செய்த பலனைத் தரும். யமதரும ராசன் தனது பட்டணத்திலிருக்கின்ற பிதுர்களை அவர்கள் முன் ஜன்மத்திற்செய்த பாவங்களைச் சொல்லிப் பசி தாகங்களினல் வருத்துகின்றார். இவர்கள் தேனோடுகலந்த பாயாசத்தைத் தன் வம்சத்திலிருந்து விரும்புவதைக் கண்டு வருஷ ருதுவில் பாத்ரபத மாதம் கிருஷ்ணபக்ஷ ஆரம்ப முதல் விருச்சிகத்தில் சூரியன் போகின்ற தினம் வரை இந்த பிதுர்களைத் தன் பட்டணத்திலிருந்து பூலோகத்திற்கு அனுப்புகின்றார். அப்போது யமபுரத்திலிருந்து பிதுர்கள் பூலோகத்திற்கு வந்து வசிப்பார்கள். அது சமயம் யமபுரம் சூநியமாக இருக்கும். ஆதலால் அது காலத்தில் பிதுர் தேவதைகளை இல்லற வாசிகள் திருப்தி செய்வித்தல் வேண்டும். அப்படி திருப்தி செய்யாதவர்களைக் குறித்துப் பிதுர்கள் சாபமிட்டுத் திரும்பிப் போவார்கள். அதனல் இல்லறத்தான் துன்பமடைய வேண்டியதாயிருக்கிறது. இக்காலத்தில் பிதுர் தேவதைகள் தங்கள் வம்சத்தினர்கள் என்னும் விசுவாசத்தைப் பாராட்டி இந்தப் பூமியிலிருப்பவர்களைக் கண்டு ஆசி கூறிப் போவதற்காகவே வருகின்றார்கள். ஆதலால் பிதுர்தேவதைகளை ஆராதிப்பதற்கு இக்காலம் சிறந்ததாயிருக்கின்றது. இல்லற வாசிகள் பிதுர் தேவதைகளைப் பூசிக்கவேண்டியது மிக முக்கியமானது. அவர்கள் தேவர்களைப் போலவே சுத்த முடையவர்களாய்த் தென்றிசையிலிருந்து வருகின்றார்கள். பூலோகத்திலுள்ள சர்வ ஜீவராசிகளும் மழையை எப்படி ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனவோ அப்படியே பிதுர் தேவதைகள் சிரார்த்தத்தை எதிர்நோக்கிய வண்ணமாகவே இருக்கின்றார்கள், இவ்விதம் சிராத்தத்தைக் கிரமமாகச் செய்தவன் தனம், புத்திர சம்பத்து, சத்துருநாசம் முதலியன உண்டாகப்பெற்று ஈற்றில் நற்கதியை அடைகின்றான். பிதுர்தேவதைகள் நம்மிடத்தில் அன்புடையவர்களாய் நம்மாற் செய்யப்படும் ஆராதனையைப் பெற்றுக்கொண்டு இப் பூலோகத்தில் சர்வ சுகங்களையும் நாம் பெற்றுய்யும்படி ஆசீர்வதிக்க இந்த மஹாளய பக்ஷம் முழுமையும் எதிர்நோக்கிய வண்ணமாயிருக்கின்

ளுர்கள். ஆதலால் அவசியம் நாம் பக்திசிரத்தையுடையவர்களாய் இப் பதினைந்து தினமும் அவர்களைப் பூசித்து நலமுறுதல்வேண்டும். மஹாளய பக்கத்தில் வரும் பரணி நட்சத்திர தினம் "மஹாபரணி" என்று பெயர் பெறும். இந்த மகாபரணிதினமும், செவ்வாய்க்கிழமை சஷ்டி திதி ரோகணி நட்சத்திரம் வியதீபாத நாமயோகம் கூடிய தினமும் கபிலை என்று சொல்லப்படும், இந்தக் கபிலை தினங்களிலும் அஷ்டமிதிதியிலும் கஜச்சாயை என்னப்படும் திரயோதசி திதியிலும் சிராத்தம் செய்தால் கயாக்ஷேத்திரத்தில் சிராத்தம் செய்த பலனுண்டாகும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் இதைப் பெரியவன்மட்டும் செய்ய வேண்டும் என்னும் நியதி கிடையாது. ஒவ்வொருவரும் தனித்தனியே இதை மாத்திரம் அவசியஞ் செய்யவேண்டுமென்று பெரியோர் கூறியிருக்கின்றனர். இக்கர்மத்தைச் செய்யாவிடில் இப்பிறப்பில் யாதும் பயன் கிடையாது. தமது சக்திக்குத் தக்கபடி இதைச்செய்து எல்லோரும் இகபர சௌக்கியங்களை அடையலாம். மஹாளய பக்கமான பதினைந்து தினங்களிலும் தவறுமலேனும் அல்லது ஏதாவது ஒரு தினத்திலேனும் இக்கருமத்தைச் செய்யலாம். சில சாமானிய ஜனங்கள் மகாளய பட்சமான பதினுலுதினமுஞ் செய்யாதிருந்துவிட்டு அமாவாசை யன்று ஊருடன் ஒக்கச் செய்து ஒழிக்கலாமென்று சிரத்தையில்லாதவர்களாய் அன்று தருப்பணஞ் செய்யப் புரோகிதர் அகப்பட்டுவிட்டாலோ அவரைப் பத்துப் பேராகக் கூடி அப்படியும் இப்படியும் இழுத்து அலங்கோலஞ் செய்து கர்மஹீனர்களாகின்றுர்கள். எல்லோரும் அமாவாசையன்றே மகாளயங் கொடுப்பதானுல் ஒரு புரோகிதர் என்ன செய்வார். ஆதலால் நேயர்கள் பத்திசிரத்தையுடன் இந்த மகாளய சிராத்தத்தை அந்தப் பட்சத்திலுள்ள பதினைந்து நாட்களில் தத்தம் சௌகரியப்படி செய்து இம்மை மறுமைப் பேறுகிய மும்மைப் பயன்களையும் பெற்றுய்வார்களாக.

---

## சைவ பாடசாலை அத்திவாரப் பிரதிட்டை

திருவாவடுதுறை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ நமசிவாயத் தம்பிரான் சுவாமிகள் சென்னை பட்டாபிராம ஐயர் வீதியில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் அரசாங்கத்தினர் மூலமாக வாங்கி வைத்திருக்கும் நிலத்தில், நிகழும் உருத்திரோத்காரிஞு புரட்டாசிமீ 3உ (19-9-23) காலை 7½-மணிக்கு உயர்தரச் சைவ பாடசாலைக்கு அத்திவாரப் பிரதிட்டை செய்தருளினுர்கள். அப்போது ஆடவரும், பெண்

டிருமாகத் திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். தம்பிரான் சுவாமிகள் அவைத்தலைமை வகித்துச் சுருங்கிய கால வளவிற்கேற்பச் சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பிய முன்னுரை எழுதி வாசித்தார்கள். அதன் பின் ரெவரண்டு ப்ரொபெஸர் பிரான்சிஸ் கிங்ஸ்பரி, பி.ஏ. அவர்களும், மேரியரசி கலாசாலை உபந்நியாசகர் ஸ்ரீமான்-கா. ரா. நமசிவாய முதலியாரவர்களும், பச்சையப்பன் கலாசாலை உபந்நியாசகர் ஸ்ரீமான்-மணி திருநாவுக்கரசு முதலியாரவர்களும் சமய போதனையின் சிறப்பையும், இக்காலத்தில் பாடசாலைகள் மூலமாகச் சைவ சமய போதனை செய்தல் சைவ சமயிகளின் இன்றியமையாத கடமையா மென்பதையும் மிகவும் வற்புறுத்தி உபந்நியாசங்கள் செய்தார்கள். சைவ பாடசாலைச் சிறுவர்கள் இருவர் ஆஸ்திக நாஸ்திக வாதம் புரிந்து யாவரும் மகிழச் செய்தார்கள். திருக்கூட்டத்தின் சபைத் தலைவர் ஸ்ரீமான்-சதுரை ராஜாகண்ணு முதலியாரவர்கள், பி.ஏ. அவர்கள் யாவருக்கும் வந்தனமளிக்கப் பத்து மணிக்குக் கூட்டம் கலைந்தது. அன்று தம்பிரான் சுவாமிகள் வாசித்தருளிய முன்னுரை வருமாறு :—

"சைவத்தின் மேற் சமயம் வேறில்லை யதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேற் றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத்த ரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே."

உலகில் வழங்கும் மதங்கள் பல. அவற்றுள் புண்ணிய பூமியெனப் பல்லோரானும் நன்கு மதிக்கப்பட்ட நம் தேசத்தில் வழங்கும் வேதாகமங்களையே முக்கிய பிரமாணமாய்க் கொண்டுள்ள மதங்களே பொதுவகையில் இந்து மதமெனப் பெயர் பெறும். இம்மதம் பல்வேறுபகுப் புடையது. அப்பாகுபாடுகளனைத்தும், சைவம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என மூன்றனுளடங்கும். சைவமென்பது சிவபெருமானையே பரம்பொருளெனக் கொண்டு பழிபடும் சமயமாகும். இச்சமயக் கொள்கையை ஆராயில் உலகிலுள்ள மற்றெம் மதத்தையும் தன்னுளடக்கி யவற்றைச் சோபானமாக்கித் தான் மேனிலையில் நின்று வீடு பயப்பதாகிய ஞானமத மென்பது நன்கு புலப்படும். இவ்வுண்மையை "யாதொரு தெய்வங் கொண்டீரத் தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனர் தாம் வருவர்" என்னும் சித்தியார் செய்யுளானும் "கருதுவார் கருது முருவமாங் கங்கைகொண்ட சோளேச் சரத்தானே" என்னும் திருவிசைப்பா திருவிருத்தத்தாலும் இன்

னும் சைவ சாத்திர நுண்ணுணர்வினலும் தெற்றென அறியலாகும். இவ்வொப்புயர்வற்ற சைவ சாத்திரங்களை ஓதி அதன் உண்மைப் பொருள் கண்டொழுகுவோர் இக்காலத்து மிகச் சிலரே. ஆகையால் இவ்வுண்மையை இந்திய சிறுவர்களுக்கு அவர்கள் பயின்றுவரும் கல்வியோடு சேர்த்தே புகட்டுவது சைவம் வளர்தற்கு ஒரு சாதனமாகும். அக்கல்வியும் சமய வழிபாடு ஈசுவர வழிபாடின்றி பயிலுவது யாதொரு பயனுமின்று. "கற்றதனல் ஆயபயன் என் கொல் வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்" என்று தெய்வப்புலவர் திருவாய்மலர்ந்ததற் கிணங்க முற்காலத்தில் நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்து பிறர்க்கு உபதேசிக்கு மாற்றலுடைய பிரமதேவன் தனக்குச் சிவபெருமானே முழு முதற் கடவுள் என்று தெரிந்தும், செருக்கினல் தன்னையே மதித்துப் பரமசிவன் முதல்வனுவ தெங்ஙனம் என்று இகழ்ந்துகூற, உடனே சிவத்தின் அம்சமாகிய வைரவக்கடவுள் அச்சிரத்தைக் கிள்ளி எறிந்தார் என்ற கதை பல புராணங்களிலும் கூறப்படுகின்றது. நிற்க. நவீன நாகரிகங்கள் நிறைந்துள்ள இந்நகரத்தில் சைவ சித்தாந்த சமய முன்னேற்றத்திற்காக பல வருடங்களாய் முயன்றுவரும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் கைங்கரியம் மிகவும் புகழத்தக்கது. அதின் காரியதரிசியா யமர்ந்திருக்கும் ம-ள-ள-ஸ்ரீ ஆதிமூல முதலியாரவர்கள் எனக்குச் சென்ற 15-வருடங்களாய் நன்றாகத் தெரிந்த நண்பர். இவர்கள் ஷை சிவனடியார் திருக்கூட்டத்திற்கே ஆதிமூலமாயிருந்து தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் சைவத்திற்கே தத்தம் செய்து தொண்டு செய்து வருவது இங்குள்ள யாவருமறிந்த விஷயமே. இவர்கள் சைவத்திற்குச் செய்யும் பணிகள் பலவும் மிகவும் பாராட்டத்தக்கன. அதில் இன்று சைவப் பாடசாலைக்கு அஸ்திவாரப் பிரதிட்டா கைங்கரியம் செய்யும் பெரும்பேறு நான் பெற்றதற்கும் இவ்வாதிமூலமே காரணம். புண்ணிய பரிபாகத்தால் சைவ சமய முறைப்பெற்றுச் சிவனடித்தொழும்பே வழி வழி நிதியெனக்கொண்டு வழிபடும் மரபில் வரப்பெற்ற சிவனடியார் திருக்கூட்டத்தில் ஒருவனுன உரிமைபற்றி இத்தொண்டு அடியேனுக்கு அவ்வாதிமூலமே ஏற்படுத்தியது போலும். இவர்கள் என் மீது வைத்த அன்பிற்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். "மலைய மாதவன் றமிழ்ச்சுவை தெரிந்தவான் தென்றல்" எனக் காஞ்சிப் புராணத்தில் கச்சியப்ப சுவாமிகள் கூறுகின்றபடி, பொதிகையில் பிறந்த தென்றல் தமிழ்ச்சுவை யறிந்ததை யொப்ப, இதற்கெதிரிலுள்ள சிவஞான சிங்கார வனத்தின் தென்றல் சைவச் சுவையறிந்து இங்கு

பயிலும் மாணுக்கருக்கு சிவ சம்பந்தமான கல்வியை பிரகாசிக்கச் செய்யு மென்பதில் ஐயமில்லை. மேலும் சிவத்தை யறிவதற்கு சிவ ஞானம் ஒன்றுமே சிறந்த சாதனம்

ஆதலால் தேசாபிமானம் பாஷாபிமானம், சைவாபிமானம் ஜாதி யபிமானமுள்ள ஒவ்வொருவரும் தங்களாலியன்ற பொருளுதவி செய்து இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் கண்ணுங் கருத்துமா யிருந்து கவனிக்கும்படி வணக்கமாய் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள் ளுகிறேன். "முன்னவனே முன்னின்ருல் முடியாத பொரு ளுளதோ."

---

## சன்மார்க்கம்

**பாளையங்கோட்டை ஸ்ரீமான் V. P. காந்திமதிநாதபிள்ளை B.A., அவர்கள் அச்சிட்டது.**

(80-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேற்கூறிய இவ்வெல்லாக் கருத்துக்களு மினிது விளங்கவன்றே, நமது சந்தான குரவர் சுவாமிகள்,

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்ருற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என, இருபகுதிப்படக் கூறியதும். இச்சுருதியின் முற்பகுதி "சை வத்திறத்தடைவர்" என்பதனேடும், பிற்பகுதி "சிவனடியைச் சேர் வர்" என்பதனேடும், முடிந்துள்ளன. பிற்பகுதியிற் கூறியுள்ள நான்கு மார்க்கங்களே சிவனடியிற் சேர்க்கு மார்க்கங்களாம். அவைக ளே சைவமார்க்கங்களாம். "பன்மார்க்கப் பொருள் பலவுங் கீழாகப் பதிபசுபாசந் தெரிந்துப் பரசிவனைக் காட்டும், நன்மார்க்கம் நாலிவை தான்" என ஆசிரியர் கூறியதும் இவற்றையே. இதுபோலன்றி, முற் பகுதியிற் கூறியுள்ள மார்க்கங்கள், சிவனடியிற் சேர்க்காவாம். சைவ மார்க்கத்திலே சேர்ப்பனவாம். இதுபற்றியே யிவைகள் யாவுஞ் சைவ மார்க்கத்தினுக்குச் சோபான மார்க்கங்களாம். இச்சோபான மார்க்

கங்களுள், வேத சிரப் பொருளை மிகத் தெளிதலாகிய வேதாந்த மார்க்கமும், ஒன்றேயாம். இம்மார்க்கமும் நேரிற் சிவனடியிற் சேர்க்குமார்க்கமன்று. இதனையுங் கடந்து அப்பாலுஞ் சென்றே, சைவமார்க்கத்தினை யடைவார். இக்கருத்துக்கொண்டே "வேதச் சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சைவத் திறத்தடைவர்" எனக் கூறாது "வேதச் சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத் திறத்தடைவர்" எனக் கூறியதும். இச்சுருதி கூறும் வேதாந்த மார்க்கமும், போலி வேதாந்த மார்க்கமன்று. உபநிடதங்கட்கு மயங்கிப் பொருள் கொள்வாருந், தம்மார்க்கத்தினை, வேதாந்த மார்க்கமெனக் கூறுவர். அதுவன்றெனக் காட்டுதற்கே, "வேதச்சிரப் பொருளை மிகத்தெளிந்தும்" எனக் கூறியதும். இக்கருத்தினையே "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தம்" என்றார் மற்றொரு சந்தானசாரிய சுவாமிகளும்.

இச்சைவ மார்க்கமும் ஒரே மார்க்கமாய் நில்லாது நான்கு வேறு மார்க்கங்களாய் நிற்பதேன். வாரணாசியிலெழுந்தருளியிருக்கும் விசுவேசரை யடையச் செல்வானுக்கு, அவ்வாரணாசி சேருமார்க்கமொன்று, அதனினின்றும், அவ்விசுவேசர் ஆலயஞ் சேரு மார்க்கமொன்று, அப்பால் அவர் சந்நிதி சேரு மார்க்கமொன்று, அதன் பின்னர் அவனடியைச் சேரு மார்க்கமொன்று, ஆக நான்கு வேறு மார்க்கங்களுளவாம். அதுபோல, சிவப்பொருளை யடைவானுக்கும் சிவனுலகிற் சேர்க்கு மார்க்கமாகிய சரியை மார்க்கமொன்று, அவனருகிற் சேர்க்கு மார்க்கமாகிய கிரியை மார்க்கமொன்று, அவனுருவிற் சேர்க்கு மார்க்கமாகிய யோக மார்க்கமொன்று அவனடியிற் சேர்க்கு மார்க்கமாகிய ஞான மார்க்கமொன்று, ஆக நான்கு மார்க்கங்களுளவாம். இவைகள் முறையே தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் பெயர் பெறும். இவைகளிற் சிவனடியிற் சேர்க்கு மார்க்கமாகிய ஞானமார்க்க மொன்றே, நேரிற் சிவனடியிற் சேர்க்கு முரிமை பற்றிச் சன்மார்க்க மெனப்பட்டது. என்றாலும் ஏனை மார்க்கங்களும், சிவனுலகு, சிவனருகு, சிவனுரு என யாதானுமோர்விதத்திற் சிவத்தின்பாலே சேர்க்கும். அன்றி வேறொரு பொருளின்பாற் சேர்க்கா. ஆதலால், அவை மூன்றும், சிவமார்க்கம், அல்லது சன்மார்க்க மெனவும் படும்.

> "சரியை கிரியாயோக சாதனம் விடுத்தவெல்லாஞ்
> சன்மார்க்கமல்ல"

என்றார் நமது தாயுமான சுவாமிகளும். இந்நான்கு மார்க்கங்களையும் எடுத்து விளக்கும் முதனூல்கள், சிவாகமங்களே யாதலால், இவை

யாவும் பொதுவாய்ச் சைவ மார்க்கமென நிற்கும். இச்சைவ மார்க்க முற்றுஞ் சன்மார்க்கமேயென நமது தாயுமான சுவாமிகள்,

> "சந்தான கற்பகம் போலருளைக் காட்டத் தக்கநெறி
> யிந்நெறியேதான் சன்மார்க்கம்"

என்றருளிச் செய்தனர்.

இந்நான்கு மார்க்கங்களும், தனித்தனி கொண்டு சேர்ப்பது, வெவ்வேறு பதங்களென்று கூறினோம். அவற்றின் தனித்தனி யியல் பென்னை யென ஆலோசிப்பாம். அவைகள் நான்கும், சிவப்பொருளை நோக்கிச் செய்யும் வழிபாடேயாம். 'வழிபாடு' எனினும், 'மார்க் கத்திற் செல்லுதல்' எனினும், ஒன்றே. சைவத் திறத்தடைந் தார் அச்சிவப் பொருளை யன்றி வேறு பொருளை வழிபடார். அப்பொருளொன்றே வழிபடுதற் குரிய பொருளெனத் தெரிந்தே, சைவத்திறத்தடைவார். அடைந்து, அதன்படி யொழுகிப் பக்குவ முதிர்ச்சி யடைந்த பின்னரே, சிவப்பொருள் இன்னதன்மைத் தென உணர் வார். அதுகாறும், அப்பொருளின் உருவம், அருவுருவம், அருவம், ஆகிய மூவகை வடிவங்களி லொவ்வொன்றினையே, யப்பொருளென வுணர்ந்து வழிபடுவார். சரியையினின்றார், அப்பொருளினுருவ வடிவத்தையே யஃதென வுணர்ந்து அகத்தொழிலால் வழிபடுவார். கிரி யையினின்றார், அவ்வுருவ வடிவத்தினுஞ் சூக்கும வடிவமாகிய அரு வுருவ வடிவத்தையே சிவப்பொருளெனவுணர்ந்து, அகத்தொழிலாலும் புறத்தொழிலாலும் வழிபடுவார். இவர்க்கு புறத் தொழிலால், உருவ வழிபாடுமுண்டு. யோகத்தினின்றார் அவ்வுருவவடிவத்தினுஞ் சூக் கும வடிவமாகிய அருவ வடிவத்தையே சிவப் பொருளென வுணர்ந்து அகத்தொழிலால் வழிபடுவார். இவர்க்கு முற்கூறிய இருவகைவழி பாடுகளு முண்டு. ஞானத்தினின்றாரோ, மேற்கூறிய மூன்று வடிவங் களுஞ் சிவப்பொருளல்ல. அதன் வடிவங்களே யெனத் தெரிந்து, அதனை யுள்ளபடி யுணர்ந்து, அறிவுத் தொழிலால் வழிபடுவார். இவர்க்கு முற்கூறிய மூவகை வழிபாடுகளு முண்டு. அன்றியும், சைவ மார்க்கத்தி லொழுகுபவர், அதன்படி யொழுகுமுன்னரே, சிவப்பொ ருள், தமக்கருள் புரியு மாற்றையுணர்வாரு மல்லர், அப்பொருள், உயிர் கட்கு, ஆண்டானாயும், பிதாவாயும், தோழனாயும், அவைகளேயாயும், இந்நால்வகையாயும் நின்றருளுந் திறத்தை, யிச்சைவமார்க்கத்திலொ ழுகிவரவே, ஒவ்வொன்று யுணர்வாராவர். புறத்தொழிலால் மாத்திரம் வழிபடுஞ் சரியையாளர் முதல்வன் தமக்கு ஆண்டானாய் நின்று

அருளுதலை மாத்திரமுணர்ந்து வழிபடுவார். அதுபற்றியே யிவரது மார்க்கம், தாசமார்க்க மெனப்பட்டது. அகத்தொழில் புறத்தொழில்களாலும் வழிபடுங் கிரியையாளர், அம்முதல்வன் தமக்குப் பிதாவாய் நின்றருளுதலையு முணர்ந்து வழிபடுவார். அதனாலேயே, அவரது மார்க்கம் புத்திர மார்க்கம் எனப்பட்டது. தனித்த அகத்தொழிலாலும் வழிபடும் யோகிகள், முதல்வன் தமக்குத் தோழனாய் நின்றருளுதலையு முணர்ந்து வழிபடுவார். இவரது மார்க்கமிதுபற்றியே சகமார்க்க மெனப்பட்டது. அறிவுத் தொழிலாலும் வழிபடும் ஞானியோ, முதல்வன் தானேயாய் நின்றருளுதலையு முணர்ந்து வழிபடுவார். இக்காரணத் தானே இவரது மார்க்கம் சன்மார்க்க மென விளங்குகிறது. எனவே, இந்நான்கு மார்க்கங்களும், முறையே ஒன்றற் கொன் றேற்றமும் ஒன்றற்கொன்று சோபானமுமாம்.

ஆனால், மேற்கூறிய நான்கு மார்க்கங்களும், ஒன்றற் கொன்றன் னியமோ வெனின், அல்ல. சிவப் பொருளினுருவ வழிபாடு, அதன் அருவுருவ வழிபாட்டிலும், அவ்விரண்டும், அதன் அருவ வழிபாட்டிலும், அம்மூன்றும் அதன் உண்மை வழிபாட்டிலும், உண்டெனக் கூறினோம். அன்றியும் இச்சரியையாதி வழிபாடுகள், முறையே, ஒன்று முற்றி மற்றொன்றாய் மாறுந் தகைமைத்து அரும்பு முற்றி மலராம், மலர்முற்றிக் காயாம். காய்முற்றிக் கனியாம். அது போல், சரியை முற்றிக் கிரியையாம், கிரியை முற்றி யோகமாம், யோக முற்றி ஞானமாம். அதாவது ஒரே பொருள் ஒரே நிலையில் அரும் பெனவும், மற்றொரு நிலையில் மலரெனவும், பிறிதோர் நிலையிற் கா யெனவும், மற்றுமோர் நிலையிற் கனியெனவுங் கூறப்படும். அதுபோல் ஒரே மார்க்கம், நிலை வேறுபாட்டால், சரியை யெனவும், கிரியையென வும், யோகமெனவும் ஞானமெனவும், நான்கு திறப்பட நிற்கும். இத னையேநமது தாயுமான சுவாமிகளும்,

“ விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோலன்றோ பராபரமே ”

என்று விளக்கியருளினர். ‘ திருக்கோவில் அலகிடல் ’ முதலிய சரியை கிருத்தியம் அத்துவித ஞானத்தை யெவ்வாறு தருவதாகும் என மலைவார் சிலர். எதுபோ லெனில், மாவரும்பு, மாங்கனி, யிவ் விரண்டினையு முன்னர் பார்த்திராத ஒருவன், இவ்விரண்டினையும், உற்று நோக்கி இவற்றில், கந்தம், உருவம், ரசம், இவற்றுள் யாதானு மொன்றில் ஒற்றுமையில்லையே, இவ்வரும்பு இக்கனியாய் மாறுதல் எவ்

வாறு கூடும் எனமலைதல் போலாம். என்றாலும், இவ்விரண்டினையுந் தெரிந்துள்ளான், இவ்வரும்பு இக்கனியாய் மாறினதிற் சந்தேகமில்லை யெனத் தெளிவான். அதுபோல, சரியையாதிமார்க்கங்களை யுள்ளபடி யுணர்ந்தார்க்கு, இச்சரியைக் கிருத்தியம் ஞானத்தைப் பயக்குமென்பதிற் சந்தேகமின்றாம். அன்றியும், கனியின்கண் காயும், காயின்கண் மலரும், மலரின்கண் அரும்பு முள்ளவாறுபோல, ஞானிக்குச் சரியையாதி நான்கும், யோகிக்கு அதனுள் முதல் மூன்றும், கிரியாவானுக்குச் சரியை கிரியை யிரண்டு முரியனவாம்.

"ஞானயோகக் கிரியா சரியைநாலும் நாதன்றன்பணி
ஞானி நாலினுக்கு முரியன்
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்குமுரியன்யோகி
கிரியாவானெண் கிரியையாதி
யானவிரண்டினுக் குரியன் சரியை யினின்றோனச்
சரியைக்கே யுரியன்"

என்ற சிவஞான சித்தித்திருவிருத்தமு மிக்கருத்தையே விளக்கிற்று. என்றால் ஞானிக்குச் சிவாலய தரிசன முதலியன வேண்டப்படா வென்பது தவறாம். அவர் சரியையாதி நான்கு மார்க்கங்களிலும் நின்றே நாதன் பணியியற்றுவாராவர். அந்நால்வகைப் பணியுமே ஞானமார்க்கம். அவை முற்றுமே சன்மார்க்கம்.

மேற்கூறிய நான்கு மார்க்கங்களிலும் நின்று சிவப்பொருளை யடைந்தார் மேலுஞ் செய்யக் கிடக்கும் பணியென்பதுண்டா? உண்டேல், எற்றுக்கு? சிவப்பொருளை யடைந்தார் ஆண்டு நிலைபெற்று நிற்கவும் வேண்டும். அங்ஙனம் நிலைபெறுதலே கலத்தல், அடிசார்தல், அல்லது முத்தி யெனப்படும். ஜீவர்கள் தம்மறிவிச்சை செயல்கள் முழுதினையுஞ் சிவத்தின் பானிறுத்துதலே, சிவத்தோடு கலத்தலாகும்.

"தொண்டலாற் றுணையுமில்லை தோலலாதுடையுமில்லை
கண்டலாதருளுமில்லைக் கலந்தபின் பிரிவதில்லை"

எனத் தமிழ்வேதங் கூறுவது மிக்கலப்பினையே. இவ்வாறு சிவத்தோடு கலத்தலின்றி யதனோடு சேர்ந்து மாத்திரமுள்ளார், அதனினின்று மீளப்பிரிபவரே யாவர். சித்தாந்த மகாவாக்கிய மாகிய பஞ்சாக்கர மந்திரத்தை விதிப்படியுச்சரித்தலே யவ்வாறு கலத்தற்குபாயமாம். வேதாந்த மகாவாக்கியம் பொதுப்படவுணர்த்தும் பொருளையே யிம் மகா வாக்கியஞ் சிறப்பினதா யுணர்த்தும். அம்மந்திரத்தின் பொருள் "அது நான் ஆனேன்" என்பது இம்மந்திரத்தின் பொருள், "சிவத்தை நமஸ்கரிக்கின்றேன்" என்பது. அம்மந்திரத்தில் "அது" என்பதாற் பொதுவா யுணர்த்தப்பட்ட பொருள் யாது என ஆசங்கிப்பார்க்கு, அது சிவமேயென விம்மந்திரஞ் சிறப்பித்துக் கூறும். அம் மந்திரம் "நான் ஆதல்" எனப் பொதுப்படக் கூறியதை, எவ்வாறாதல்? என ஆசங்கிப்பார்க்கு, 'இறைபணி நிற்றல்', அதாவது "நமஸ்

கரித்திலே" 'நான் ஆதல்' என, இம்மந்திரஞ் சிறப்பித்துக் காட்டும். வேதத்திற்குச் சிவாகமம் சிறப்பாதல்போல, வேதமஹா மந்திரமாகிய வேதாந்த மகாவாக்கியத்திற்கும் சிவாகம மஹா மந்திரமாகிய சித்தாந்த மகாவாக்கியமுஞ் சிறப்பினதாய் விளங்கும். இம்மந்திரம், "ஏகனுகியிறை பணி நிற்றலே" யுணர்த்தும். இஃதுணர்த்தியபடி, தான் சிவப் பொருளின்பால், கசிந்த தொண்டினேடு நின்று, அதாவது, தனதறிவிச்சை செயல்களியாவும் அப்பொருளின்பாலே ஒருப்பட நின்று, தானுஞ் சிவமும் ஆண்டானடிமைத் திறமாய் நிற்பதை இம்மந்திரம் ஓதுமுறையில் வைத்துச் சுத்தமானதமாய் உச்சரித்து நிற்றல் வேண்டும். இம்மந்திரத்தை யிவ்வாறோதலே, சிவப்பொருளைச் சார்ந்தார் அதனேடு கலத்தற்கு நெறியாம் என நமது ஆசாரிய சுவாமிகளும்.

"முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறியே சாணுகறிண்ணமே
யந்நெறியே சென்றங்கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே"

என இதன்றலைப்புச் சுருதியிற் கூறினர்.

இதுகாறுங் கூறிய பரம்பொருளாகிய சிவப்பொருளோடு ஜீவர்களைக் கூட்டுவிக்கு மார்க்கம் இச்சைவமார்க்கமே. அச்சிவப்பொருளோடு ஜீவர்களைக் கலப்பித்து அதனேடு நிலை நிறுத்து மார்க்கமுமிதுவே. எல்லா மார்க்கங்களுந் தன்பால் முடிவுபெற நிற்குஞ் சித்தாந்த மார்க்கமும் இதுவே. இம்மார்க்கமன்றோ இந்திராதி தேவர்கட்கும், மற்றும் அரசர்கள், இருஷிகள், முனிவர்கள், சித்தர்கட்கும் தாரகமாயுள்ள மார்க்கம்.

"அந்தோ வீததிசய மிச்சமயம் போலின்றறிஞரெலாம் நடுவேறிய வணிமாவாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம் வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்றும்
இந்திராதிபோக நலம் பெற்ற பேர்க்கு மிதுவன்றித் தாரகம் வேறில்லை யில்லை"

என்று புகழ்தற்குரியது மிம்மார்க்கமே. இம்மார்க்கத்தை வளர்த்தற்கன்றோ யிவ்வுலகிற் பல்லூழி காலந்தொட்டுப் பலவரசர்கள், பல கோடித் திரவியங்கள் செலவு செய்து, பல சிவாலயங்களமைத்ததும் அவற்றிற்குப் பல பூஸ்திதிகளளித்ததும், இம்மார்க்க போதகத்திற்காக வன்றோ? பல சைவாதீனங்கட்கு ஏராளமான நிதிகள், பல வேந்தர்களாலும் பிரபுக்களாலும் அளிக்கப்பட்டன. ஜன்மம் ஒன்றிலே தானே ஜீவன் முத்தனுக்கி, ஞான முதிப்பித்துப் பிறப்பை யறுத்துப் பேரானந்த முத்தியிலுஞ் சேர்க்கு மார்க்க மிதுவே. இம்மார்க்கத்தினையே நமது சந்தான குரவர் சுவாமிகள்,

"சித்தாந்தத்தே சிவன் றன்றிருக்கடைக்கண் சேர்த்திச்
செனன மொன்றிலே சீவன் முத்தனுக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி மடுத்தானந்தம்
பொழிந்து வரும்பிறப்பை யறுத்து

முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பனென்று மொழிந்
திடவு முலகரெல்லா மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப்பாவப் பெருங்
குழியில் வீழ்ந்திடுவரிது வென்னபிராந்தி"

எனச் சித்தாந்த நெறி நின்ருருயர்வும், அதனை நிந்தித்துப் பிதற்றி னூர் தாழ்வுமுடன் கூறினூர்.

இத்துணைப் பெருமை வாய்ந்த இச்சன்மார்க்கத்தின் தற்கால நிலைமையை யென் சொல்ல! அந்தோ பரிதாபம்! சைவம் இன்னது தென உணர்ந்தார், ஒரு சிலரே. அதற்கு முதனூல்கள் யாவையென உணர்ந்தார் அதினுஞ் சிலரே. அம்முதனூல்களாகிய சிவாகமங்களி லவைகள் தாமுள? அவைகளும் யாண்டுள? என்றுணர்ந்தார் ஒருவருமேயில்லை. அந்நூல்களி லொன்றையேனும் முற்றும் படித்தாருளரோ என்பது பெருஞ் சந்தேகம். சைவம், சூத்திரர் சமயமென்பார் சிலர். இவர் சைவ சாத்திரங்கள் பாடியம் இவற்றின் பெரும் பாகத்தை யியற்றினூர் பிராமணோத்தமரே யென்பதை யறியார். சைவம், தமிழ்ச் சமயமென்பார் சிலர். சைவ முதனூல்களும், மற்றும் அனேக சைவக் கிரந்தங்களும் வடமொழியிலேயே உள்ளனவென் பதை யறியார். சைவம் அவைதீக மென்பார் சிலர். சிவாகமங்களோடொப்ப, வேதங்களையுஞ் சைவம் முதனூல்களாகக் கொள்ளுமென் பதையும், அவ்விரண்டிற்கும், ஒன்ருேடொன்று முரணுது தாற்பரியங் கூறுவது சைவமே யென்பதையுமுணரார். சைவம், துவைதமே யென் பார் சிலர். அத்துவித ஞானத்தை யுள்ளபடி யுணர்த்துவது சைவ மொன்றே யென்பதையுமுணரார். இம்மார்க்கத்தை யுள்ள படி யுணர்த்துவாரின்மையா னன்ருே, இதன் கதியிவ்வாருகியது. இதனை விளக்குதற்கென்றே யேற்பட்டுப் பெரு நிதிகளு மளிக்கப் பெற்ற சைவாதீனங்களிற் பல பயனிலவாய்ப்போயின.

நமது சைவ சன்மார்க்கம், இவ்வாறு நிலைகுலைந்து நிற்க யார்தான் சகிப்பார். பண்டைக்காலத்திற், பல சமய குரவர்கள் முதலியோர், நமது சன்மார்க்கத்தை வளர்த்தெடுத்து ஆதரித்தும் வந்தனர். இக் காலத்திலும் பல சைவாபிமானிகள், பல விடங்களினின்றுங் கிளம்பி வெளிவந்து, நமது சைவ மார்க்கத்தைப்பேணி யாதரிப்பாராயினர். இச்சன்மார்க்க பரிபாலனத்திற்கென்றே, பல விடங்களிலும் பல சபைகள் ஏற்பட்டுள்ளன. பல புத்தகசாலைகளும் அமைபப்பெற்றன; பல பத்திரிகைகளும் வெளிவந்தன.

இத்தருணத்தில் நம்மவர்களெல்லா மொன்று சேர்ந்து, ஒரே மனதுடையராய் நமது சன்மார்க்க பரிபாலனத்திற் சிறிது நாட்டம் வைப்போமேல், இம்மார்க்கம் அதன் பூர்வ நிலையை யடைந்து, 'மௌன மோலி அயர்வறச் சென்னியில் வைத்திராஜாங்கத்தி லமர்ந் தது வைதீக சைவம், அழகிதந்தோ" என அழகில் நிற்கு மென்பதிற்

சந்தேகமில்லை. அவ்விதங் கூட்டுவிக்க நாமெல்லாருந் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

" வையநீடுக மாமழை மன்னுக—மெய்விரும்பிய வன்பர் விளங்குக
சைவநன்னெறி தான்றழைத்—தோங்குக தெய்வ வெண்டிருநீறு சிறக்கவே "

திருச்சிற்றம்பலம்.

---

## கடவுளின் உருவம்

கடவுளுக்கென ஒரு உருவம் இல்லை. அவரை யார்யார் எவ்வெவ் வுருவமாக வழிபடுவார்களோ அவரவர்களுக்கு அவ்வவ்வுருவமாக இருந்து அவர் அருள் சுரப்பார். அவரை வணங்குவோர்களின் அன்பின் அளவாக அவர் அருள் வெளிப்படுதலால் அவரை வழிபடும் மெய்யன்பர்களின் அன்பே அவர் உருவமும் மனமே கோயிலுமாகும்.

### திருமந்திரம்

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

### அற்புதத் திருவந்தாதி

வானத்தானென்பாருமென்க மற்றும்பர்கோன்
றானத்தா னென்பாருந்தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத்தாலிருண்ட மொய்யொளிசேர்கண்டத்தான்
என்னெஞ்சத்தானென்பன் யான்.

கடவுள் என்றும் அழிவின்றி ஒரே தன்மையாய் நிலைபெற்றிருத்தலினாலும், உண்மைநெறியில் நிற்பார்க்கே அவரருள் சுரத்தலாலும், உண்மை அவர் உருவம் எனவும், தமக்கு ஒருவர் அறிவிப் பாரின்றி அறிவுக்கறிவாய் எல்லா உயிர்களுக்கும் உணர்த்தும் பேரறிவாயிருத்தலினால் ஞானம் அவர் உருவமெனவும், என்றும் வரம்பிலின்பமுடையவராய்த்தம்மையடைந்த ஆன்மாவிற்கும் வரம்பிலின்பம்தருவதனால் ஆனந்தம் அவர் உருவம் எனவும் சொல்லப்படும். ஆதலால் அவரைச் சச்சிதானந்த உருவன் என்று கூறுவார்கள்.

சச்சிதானந்தம் என்பது சத்து சித்து ஆனந்தம் எனப்பிரிக்கப்பட்டு உண்மை அறிவு ஆனந்தம் எனப் பொருள்படும்.

கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருத்தலினால் எல்லாப்பொருள்களும் அவர் திருமேனியாகும். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய இவ்வெட்டும் அவர் திருமேனியாயிருப்பதனால் அவரை அட்டமூர்த்தியென்பார்கள். இதுபற்றியே வைதிகர்கள் இவ்வெட்டையும் வணங்குகிறார்கள். பிருதிவிரூபமான விக்கிரக வணக்கமும், கங்கைமுதலிய தீர்த்தவணக்கமும், யாகம் முதலிய அக்கினி வணக்கமும், சூரியபூசை, சந்திரபூசை முதலியனவும், அடியார்

களைக்கடவுளாகப் பாவித்து வணங்கும் வணக்கமும், பஞ்சபூதத் தலங்களில் செய்யும் பஞ்சபூதவணக்கமும் கடவுளின் அட்டமூர்த்தவணக்கமேயாம்.

### திருவாசகம்

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

### தேவாரம்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெரியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாச மாயட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி
நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிக ணின்றவாறே.

கடவுள் இருவகைப் பிரபஞ்சங்களினும் நீக்கமற நிறைந்திருப்பினும் அவையேதாமாகாமல் அவற்றின்வேறான முழுமுதற்பொருளாயிருக்கிறார். ஆதலால் அவர் நிலமல்ல, நீருமல்ல, தீயுமல்ல, வளியுமல்ல, வெளியுமல்ல, வேறெவையுமல்ல.

### தேவாரம்

மண்ணல்லை விண்ணல்லை வலையமல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை
யெண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை பிறிதல்லை யானாலும் பெரியாய்நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை யுணர்வரிய வொற்றியூ ருடையகோவே.

### திருவிளையாடற்புராணம்

பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ள மதியின்
பேதங்களல்ல வினையன்றி நின்ற பிரிதல்ல வென்று பெருநூல்
வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சவெளி யென்ப கூடன் மறுகிற்
பாதங்கணோவ வளையிந் தனதி பகர்வாரை யாயு மவரே.

கடவுள் தமக்கென ஒரு உருவம் இல்லாதவராகவும் நமது உணர்வுக்கு எட்டாதவராகவுமிருந்தால், அவரை நாம் எப்படி வணங்குவது என்றால், அவர் தமக்கென ஒரு நாமமும் ஒரு உருவமும் இல்லாதவராயிருப்பினும் அளவுபடாத காருண்ய மேலீட்டினால் ஆன்மாக்கள் தம்மைவணங்கிப் பிறவிக்கடலினின்று கரையேறவேண்டிப் பற்பல அருளுருவங்களைத் தாங்கிப் படைத்தல் காத்தல் முதலிய தொழில்களைச்செய்கிறார். அன்றியும் துட்டநிக்கிரகம் சிட்டபரிபாலனம் செய்யவேண்டியும், சிற்றறிவுடைய ஆன்மாக்கள் விதிவிலக்குகளை யறிந்து தீவினைகளை யொழித்து நல்வினைகளைச் செய்து தமது உண்மை நிலையையுணருமாறு வேதாகமங்களைத் திருவாய் மலர்ந்தருள வேண்டியும் கடவுள் எண்ணிறந்த அருட்கோலங் கொண்டனர். இவ்வருட்கோலங்களே நாம் வழிபட்டுய்யும் உபாசனா மூர்த்தங்களாயிருக்கின்றன.

### தேவாரம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி மயானத்தான் வார்சடையா னென்னினல்
ஒப்புடைய னல்ல னொருவனல்ல னோரூரனல்ல னோருவம னில்லி [லால்
அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே.

கடவுள் தமக்கென ஒரு உருவமில்லாதவராதலால் அவரை ஆண் எனவாவது பெண்எனவாவது அலி எனவாவது சொல்ல இடமில்லை. ஆயினும், உலகம் சித்து அசித்து என இருவகையாகவும், அசித்துப் பொருள்கள் குணகுணிகளாகவும் இருப்பதுபோல் இவ்விருவகைப் பொருள்களையுந் தமக்குச் சரீரமாகக்கொண்ட கடவுளும் அருளாகிய குணத்தையே சத்தி அல்லது வல்லமையென்னும் மனைவியாக உடையவராய் உயிர்களுக்கெல்லாம் தாயுந்தந்தையுமாயெழுந்தருளிப் படைத்தல் காத்தல் முதலிய தொழில்களைச் செய்கின்றார். கடவுளும் அவர் அருட்சத்தியுங்கூடி ஆணும்பெண்ணுமாயிருத்தலினாலேயே சித்துப் பொருள்களெல்லாம் ஆணும்பெண்ணுமாகவும் அசித்துப் பொருள்களெல்லாம் குணகுணிகளாகவும் இருக்கின்றன.

(குணத்தையுடையது குணியெனப்படும்.)

### திருவாசகம்

உண்டொ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்டனேற் குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே.

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்கவளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

கடவுள் உயிர்களுக்குத் தாயுந் தந்தையுமாகுந் திருமேனிகொள்ளாவிடில், அவருக்குப்படைப்பு முதலிய தொழில்கள் இரா. அவர் ஆன்மாக்களுக்கு அனுக்கிரகித்தலும் இராது. இதையறியாதார் கடவுளைத் தாயுந்தந்தையுமாக வழிபடுவாரைப் பார்த்துக் கடவுளுக்கு மனைவி மக்களும் உளரோ எனப்பரிகசிப்பர். இவர்கள் அவரைத்தந்தையாக மாத்திரம் வழிபடுவர். தாயின்றித்தந்தையில்லையாதலாலும், தந்தையைக்காட்டிலும் தாய்க்கே மக்களிடத்தில் அன்பு அதிகமாதலாலும், தாயினுஞ்சாலத் தயாநிதியாகிய கடவுளைத் தாயுந்தந்தையுமாக வழிபடுதலே சாலச்சிறப்புடைத்தாம்.

### திருவாசகம்.

நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கடவுள் நமக்குத் தாயுந்தந்தையு மாத்திரமாகவா இருக்கிறார்! நமக்கு இருவினையொப்பும் மலபரிபாகமும் வரும்போது நம்மையாட் கொள்ளும் ஞானாசிரியராகவுமிருக்கிறார். பிரமாதி தேவர்களுக்கு அவ ரவர்கள் உலகங்களையாளும் அரசுரிமைகளைக் கொடுக்கவும் நீக்கவும் வல்ல சர்வலோக சக்கிரவர்த்தியாகவும் இருக்கிறார். நாம் தீவினைகளைச் செய்யமுயலும்போது மனச்சாட்சியாயிருந்து செய்யவேண்டாமென்று தடுக்குந் தோழனாகவு மிருக்கிறார். நினைக்குந்தோறுங் காணுந்தோறும் பேசுந்தோறும் கூடுந்தோறும் புதிது புதிதாகப் போகத்தை விளைவிக் கும் போகரூபியாகவுமிருக்கிறார்.

### தேவாரம்.

அப்பனீ யம்மைநீ யையனுநீ யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ யிறைவனீ யேறூர்ந்த செல்வ னீயே.

கடவுளுடைய திருமேனி உருவத்திருமேனி யெனவும் அருவத் திருமேனி யெனவும் உருவும் அருவும் சேர்ந்த ரூபா ரூபத்திருமேனி யெனவும் மூவகைப்படும். இம்மூன்று திருமேனிகளும் அவருக்கு அனாதியாகவே உண்டு. அவர் எங்கும் வியாபித்தும் உளக்கண்ணா லன்றி ஊனக்கண்ணாற் காணக்கூடாமையால் அவருக்கு அருவத்திரு மேனியும், படைப்பாதிதொழில்களைச் செய்தலால் உருவத்திருமேனி யும், உருவெனவும் அருவெனவுஞ் சொல்லப்படாத நிலையினராய் ஏக காலத்தில் உருவும் அருவும் உடையவராயிருத்தலினால் ரூபாரூபத் திரு மேனியும் கூறப்படும்.

### சிவஞான சித்தியார்.

அருவமோ ரூபாரூப மானதோ வன்றிநின்ற
உருவமோ வுரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னில்
அருவமும் ரூபா ரூப மானது மன்றி நின்ற
உருவமும் மூன்றுஞ் சொன்ன வொருவனுக் குள்ள தாமே.

கடவுள் எங்குமாய் யாவையுமா யிருத்தலினால் அவருக்கு உலக மெல்லாம் உடலாகவும் உயிர்களெல்லாம் உறுப்புகளாகவும், திக்குகள் ஆடையாகவும் இருக்கின்றன. அவருக்குந் திக்குகள் ஆடையாயிருப்ப தனால் திகம்பரன் என்னும் நாமம் உண்டாயிற்று.

### குமர குருபர சுவாமிகள் திருவாக்கு

### நான்மணிமாலை.

தேங்குபுக ழாரூர்த் தியாகர்க் கெண்டிக்குமொளி
வீங்கு பகற்போது வெண்படமாம்—தூங்கிருள்சூழ்
கங்குற் போது கரும்படமாம் செம்படமாம்
பொங்குற்ற புன்மாலைப் போது.

கடவுள் கொண்டருளும் அருட்டிருக்கோலங்கள் எண்ணிறந்தன வாயினும், பூவுலகத்தினர் தம்மை எளிதில் வழிபட்டு உய்யும்படி கொள்ளுந்திருமேனிகள் குரு லிங்கம் (விக்கிரகம்) சங்கமம் (அடியார்கள்) என்னும் மூன்றுமாம். பால், பசுவின் சரீரமுழுவதும் வியாபித்திருப்பினும், 'அதன்முலையின் வழியாகச் சுரப்பதுபோல், கடவுளுக்கு யாவும் திருமேனியாயிருப்பினும் குருலிங்க சங்கமம் என்னும்மூன்றிடங்களே மனிதர்கள் அவரைஎளிதில் வழிபட்டு அவரருளைப்பெறக் கூடிய இடங்களாயிருக்கின்றன. ப-ர்.

---

## பெரிய புராணச்சுருக்கம் முதற்பகுதி

"பெரிய புராணச்சுருக்கம் முதற்பகுதி" என்னும் நூலொன்று இதனையச்சிட்டு வெளியிட்ட காக்ஸ்டன் அச்சுக்கூடத்து அதிபர் C. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ் Madras, அவர்களால் ஆராய்ச்சியினிமித்தம் எமக்கு அனுப்பப்பட்டது.

இதில் ஒன்பது நாயன்மார்கள் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. சரித்திரங்கள் இனிய எளிய செந்தமிழ் வசன நடையில் எழுதப்பட்டுள்ளன. சரித்திரங்களின் இடையிடையே அவ்வச் சரித்திரங்களில் அமைந்துள்ள பத்திரசமும், சாத்திரக்கருத்துக்களும், தமிழின் சுவையும், தொண்டின் சிறப்பும், பிறவும்படிப்போர்க்கு எளிதில் விளங்குமாறு 281 பெரியபுராணச் செய்யுட்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவைகளுக்குக் குறிப்புரை அகராதி முதலியனவும், பெரியபுராண வரலாறு, நம்பியாண்டார் நம்பிசரித்திரம், திருத்தொண்டத்தொகை, அவரவர்களின் புராணசாரம் திருவந்தாதிச் செய்யுட்கள், திருத்தொண்டத்தொகை முதலியனவும் இதில் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.

இந்நூல் பாடசாலைகளில் பாடபுத்தமாக வைத்துக்கற்பிப்பதற்கு ஏற்ற முறையில் இயற்றப்பட்டிருத்தல் மிகவும் பாராட்டற்பாலதாம்.

இ. ஆதிமூல முதலியார்

"சைவம்" ப-ர். 15-10-23.

---

# முப்பொருளுறவு

இப்புத்தகம், "நியு ரிபார்மர்" பத்திராதிபர் D. கோபால செட்டியாரால் எழுதப்பட்டது. இதில் சைவ சித்தாந்தத்தின்படி, பதி, பசு, பாச உறவை நமது சாஸ்திரங்களில் இதுவரையில் கூறியிராத அநேக ஆச்சரியமான புது கோட்பாடுகளைக்கொண்டு, கரதலாமலகம்போல் தெளிவாக விளக்கப்பட் டிருக்கிறதுடன் அநேக நுட்பமான ஞான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. இந்நூலை சைவ சித்தாந்த சிகாமணிகளாகிய திருவாளர்கள் T. பொன்னம்பலம் பிள்ளை M.R.A.S. பாளயங்கோட்டை சைவசபை காரியதரிசி, V. M. கல்யாணசுந்தரம் பிள்ளை B.A., L.T., M. S. பூரணலிங்கம் பிள்ளை B.A., L.T., V. P. காந்தமதி நாதபிள்ளை B.A. T. இராமலிங்கபிள்ளை M.A., முதலிய அநேகரும், ஜஸ்டிஸ், சுகுணபோதினி முதலிய பத்திரிகைகளும் வியந்து பேசுகின்றனர். இதன் விலை அணா 8. வேண்டியவர்கள் அடியில் கண்டவருக்கு எழுதவும்.

D. கோபால செட்டி,

"நியு ரிபார்மர் பத்திராதிபர்" அரக்கோணம்.

---

# அறிவிப்பு

ஸ்ரீ அப்பய தீக்ஷிதர் அவர்களால் செய்யப் பெற்ற சிவார்ச்சனா சந்திரிகையும் அகோர சிவாசாரியரால் வியாக்யானம் செய்யப்பெற்ற அஷ்டப் பிரகரணத்துள் தத்துவ பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், ஆகிய மூன்றும் அடங்கிய புத்தகம் ஒன்றும் நம்முடைய சங்கத்தினின்றும் வெளியா யிருக்கின்றன. வேண்டுவோர் நமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சிவார்ச்சனா சந்திரிகை .... ... ரூ. 1 0 0

தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவநிர்ணயம்
ஆகிய மூன்றும் ... ... " 1 0 0

தபாற்சார்ஜ் வேறு

இங்ஙனம்:

காரியதரிசி,

சிவாகமசங்கம், தேவகோட்டை.

# திருவருள் கம்பெனி

# THIRUVARUL & Co.,

General Merchants & Booksellers, 43, Palayappen Street,
G. T. MADRAS.

## ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடல் மெய்கண்ட விருத்தியுரை

பல நூல்களைப் படித்து அரிதில் அறியும் வேத சிவாகமங்களின் ஞானபாதப் பொருள்களை யெல்லாம் பல மிரபல பிரமாணங்களோடு இவ்வுரையில் அறியக் கூடும். ஷை சுவாமிகள் திருவுருவப் படத்தோடு, பட்டு கலிகோ பயிண்ட் செய்தது.

விலை ரூபா 4—0—0

| | | | |
|---|---|---|---|
| பட்டினத் தடிகள் பிரபந்த விருத்தியுரை | ரூ. 3 | 8 | 0 |
| கம்ப ராமாயண வசனம் (திரு அவதார முதல் பட்டாபிடேகம் வரையில் | 3 | 0 | 0 |

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| விநோதரச மஞ்சரி | 2 | 0 | பகவத் கீதை பாக்கட் சயிஸ் | 1 | 0 |
| பரமபதமார்க்கம் | 0 | 8 | ஞானத்திரட்டு | 1 | 0 |
| ஜடபரதோ பாக்கியானம் | 0 | 8 | தேவி பராக்கிரமம் | 1 | 4 |
| பூலோக இன்ப துன்பம் | 0 | 6 | சங்கீத ஞானபூஷணி | 1 | 8 |
| ஹிந்துலா | 1 | 0 | சின்மய தீபிகை | 0 | 8 |
| செந்தமிழ் வாணவர் சரித்திரம் | 0 | 12 | திருமுறைத் திரட்டு (காஞ்சி நாகலிங்க முதலியார் பதிப்பு | 2 | 8 |
| பிரபஞ்ச பாவபுண்ணியம் | 0 | 8 | மஹாபதிவிரதைகளின்சரித்திரம் | 0 | 8 |
| முக்தி சோபானம் | 0 | 8 | பன்னிரண்டு ராசாக்கள் கதை | 0 | 12 |
| இந்திரஜாலக் கதைகள் | 0 | 8 | சிகிச்சா ரத்தின தீபம் (வைத்திய நூல்) | 2 | 8 |
| பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு. சுவாமிகள் சரித்திரமு மடங்கியது. | 2 | 0 | கண்ணுசாமீயம் வைத்தியநூல் | 1 | 8 |

இவைகளன்றி இதர நாவல்களும், பாடசாலையில் வாசிக்கும் சிறுவர்களுக்கு வேண்டிய, தமிழ் வாசகங்கள், இலக்கணப் புத்தகங்கள், தேச சரித்திரங்கள் முதலியனவும் எம்மிடம் கிடைக்கும்.

## RINGWORM OINTMENT

இது சரீரத்தில் உண்டாகும் தேமல், சகலவிதமான படைகள், சொறி, கரப்பான் முதலியவற்றிற்கு, ஷை சரீரத்தின் பாகத்தை கார்பாலிக் சோப் தேய்த்து சுத்தஞ் செய்து ஒருமுறை பூசினவுடன் மிகவும் குணம் தரும்.

விலை புட்டி 1-க்கு 0—8—0 1 டசன் புட்டி 5—4—0

## EUCALYPTUS OIL

யூகலிப்டஸ் ஆயில் என்னும் நீலகிரித் தயிலம் புட்டி 1-க்கு 0—4—0
1 டசன் 2—8—0

தர்மா மீட்டர் என்னும் சுரம்பார்க்கும் டிக்கிரி 0—14—0 1 டசன் 9—0—0

குறிப்பு:— ஷை புத்தகங்களுக்கும், மருந்துகளுக்கும், பாக்கிங் சிலவும் தபால் சிலவுக் பிரத்தியேகம்.



Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.